DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.55/2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW1

பட்டியல் சாட்சி LW1

| | | |
|---|---|---|
| Name | : | **முத்துபாண்டி** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 31.10.2023 |

**( A1, A2 are present with counsel )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் கிழநீலிதநல்லூர் கிராமத்தில் குடியிருந்து செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி வெள்ளத்தாய் என்ற மனைவியும் இரு குழந்தைகளும் உள்ளனர். எனக்கும் எனது மனைவி வெள்ளத்தாயிக்கும் திருமணம் ஆகி 12 வருடங்கள் ஆகின்றது. திருமணத்திற்கு முன்பு எனது மனைவி வெள்ளத்தாய்க்கும் ஆஜராகியுள்ள 1ம் எதிரி அந்தோணி ராஜ் என்பவருக்கும் தொடர்பு இருந்தது. மேற்படி 1ம் எதிரிக்கும் எனது மனைவிக்கும் உள்ள தொடர்பு சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, 3 1/2 வருடங்களாக பிரிந்து இருந்தோம்.

இது சம்பந்தமாக அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனு கொடுத்து விசாரித்து அனுப்பிவிட்டார்கள். நான் மலையான்குளம் மில்லில் செக்யூரிட்டியாக வேலை முடித்துவிட்டு 04.04.2019 அன்று இரவு 7 மணிக்கு மலையாங்குளம் – சிதம்பரபுரம் செல்லும் வழியில் கல்மண்டபத்தின் அருகில் சென்ற போது அந்தோணி ராஜிம், ஆஜர் 2ம் எதிரியும் வழிமறித்தார்கள். அதற்கு நான் எதற்காக என்னை வழிமறிக்கிறீர்கள் என்றுகேட்ட போது, உன் பொண்டாட்டியுடன் நீயும் வாழ மாட்டாய் என்னையும் வாழ விடமாட்டாய் என்று 1ம் எதிரி அந்தோணி ராஜ் சொல்லி, ஒரு முடிவோடு தான் வந்து நீ உயிரோடு இருந்தால் தானே எனக்கு பிரச்சனை என்று சொல்லி அந்தோணி ராஜ் என்னை கிழே தள்ளி விட்டு, நெஞ்சில் மிதித்து, வேல்முருகன் என்னை கையை பிடித்து கொண்டார். அந்தோணி ராஜ் என் வாயில் பூச்சி மருந்தை ஊற்றினார்கள். பின்பு ஏலே தேவிடியா மகனே உன்னை இன்றோடு தொலைத்து கட்டவேண்டும் என்று கூறி கொண்டே மருந்தை என் வாயில் ஊற்றினார்கள். அதை நான் தட்டிவிட்டதில் மேற்படி மருந்து என் கை முகத்தில் சிதறியது. பின்பு நான் மயக்கமாகி வாயெல்லாம் கண்ணெல்லாம் எரியுது என்று சொல்லி மயங்கிவிட்டேன். நான் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கத்தினேன். அப்பொழுது 1ம் எதிரி அந்தோணி ராஜ் நீயாக தான் மருந்தை குடித்தேன் என்று சொன்னால் தான் காப்பாற்றுவேன் என்று சொன்னதின் பேரில் நான் என் உயிரை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சரி என்று கூறினேன். பின்பு எதிரிகள் என்னை பைக்கில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள். அரசு மருத்துவமனையில் சேர்க்கும் பொழுது இந்த விசயத்தை வெளியே சொன்னால் உன்னை கொன்றுவிடுவேன் என்றும், நீயாக தான் மருந்தை குடித்தாக சொல்ல சொன்னார்கள். அதையே நானும் சொன்னேன். அதன் பிறகு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் பொழுது குருவிகுளம் போலிசாரிடம் விவரத்தை சொன்னேன்.

புகார் வாக்குமூலம் பதிவு செய்துகொண்டு, மேற்படி வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அது **அ.சா.ஆ.1** ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**கு.வி இல்லை.**